உத்தரப்பிரதேச மாநில முன்னாள் முதல்வர்

அகிலேஷ் யாதவ் பிறந்த நாள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை 2-

உத்தரப் பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவிற்கு நேற்று பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

உத்தரப் பிரதேச மாநிலத்தின் துணிச்சல்மிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு.அகிலேஷ் யாதவ் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்.

வரும் ஆண்டு வெற்றிகரமான ஆண்டாக அமைய வாழ்த்துகள்.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்

கனமழை:

கேரளா விரைகிறது!

தேசிய பேரிடர் மீட்புப் படை!

திருவனந்தபுரம், ஜூலை 2-

தென்மேற்கு பருவமழை காரணமாக கேரளாவில் பல்வேறு இடங்களில் கனமழை பெய்து வருகிறது. மேலும், பல்வேறு மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

கனமழை எச்சரிக்கையை தொடர்ந்து, அரக்கோணத்தில் இருந்து கேரளாவிற்கு தேசிய பேரிடர் மீட்புப்படை விரைகிறது. மீட்புப்பணியில் ஈடுபட ஏதுவாக ஒரு குழுவுற்கு 25 பேர் என 175 பேர் கொண்ட 7 குழுக்கள் கேரளா சென்றுள்ளது.

தோன்ற வேண்டும் மக்கள் தோன்றாத் துணை நாதராக!

கள்ளச் சாராயச் சாவுக்கே
களத்திற்கு விரைகிறார் முதல்வர்!
அதற்குப் பிறகு
எதிர்க் கட்சித் தலைவர்
எடப்பாடி போறார்!
ஆனால் பற்றி எரிகிறது மணிப்பூர்
கள்ள மௌனத்தில்
பயணித்துக் கொண்டிருக்கிறார்
பாரதப் பிரதமர்!
ஆறுதல் தரப் போகிறவர்களுக்கும்
அனுமதி மறுப்பு!
அமைச்சரை நீக்குகிறார் ஆளுநர்
அதிகாரம் இல்லை என்கிறார் முதல்வர்!
கோப்புகளைப் போலத்
தனது ஆணையையும் தானே
நிறுத்தி வைக்கிறார் ஆளுநர்!

எப்போது கைவைப்பார்களோ
என்று
திகைப்பில் தவிக்கின்றன
அரசமைப்புச் சட்டமும்
ஜனநாயகமும்!

மாற்றப்பட வேண்டியது
அரசமைப்புச் சட்டம் இல்லை;
அதிகார ஆணவம்.

பொதுநிதி மட்டுமன்றிப்
பொது நீதியும் காக்கப்பட வேண்டும்.
அரசமைப்புச் சட்டப்படி
பொதுமக்கள் விரல் ரேகையில்
அதிகாரத்தின் ஆயுட் காலம்!

எஜமானர்களாகக் கருதாமல்
பொறுப்பான தலைவர்களாகப்
பதவிக்கு வருகிறவர்கள்
பக்குவப்பட வேண்டும்!

பதவி கொடுத்தவர்களைப்
பரிதவிக்க விட்டுவிட்டு
வெண்சாமரக் காற்று வேண்டி
வெளிநாட்டில் சுற்றுகிறார்கள் !
ஜனநாயகம் என்பது
ஏழைகளின் வாக்குகளைப் பெற்றுப்
பணக்காரர்களோடு
பயணிப்பதன்று.

நம்பிக்கைக்கும்
உண்மைக்குமான
இடைவெளியைப்
பொதுமக்கள் உணரும் காலம் இது!

நம்பிக்கை என்பது
கதைகளால் கட்டமைக்கப்பட்ட
தனிக்குழு விருப்பம்!
உண்மை என்பது சான்றுகளைக்
கொண்டு
நிறுவப்படும் சமூக நலன்!

தனிக்குழு நம்பிக்கையைச்
சமூக உண்மையாக்கி
மதத்தைக் காட்டி ஜனநாயகத்தை
வெறுப்பு அரசியலின் நெருப்புக் கடலில்
மூழ்கடிக்கிறார்கள் !

கலைஞர் கோட்டத்தைத்
திறந்து வைத்த கையோடு
ஜனநாயகக் கோட்டத்தைக்

கட்டியெழுப்பப் புறப்பட்டிருக்கிறார்
தமிழக முதல்வர்!

பாட்னா பீகார் தலைநகரம்
அஜாதசத்ரு காலத்திலிருந்தே
(கி.மு.490)
தலைநகராக இருக்கிறது!

பாட்னாவின் பழைய பெயர்
பாடலிபுத்திரம்!

சங்க காலத்திலேயே
பாடலிக்கும் தமிழுக்கும்
தொடர்பு இருந்திருக்கிறது!
கங்கைப் பகுதியில்
நிதியை மறைத்து வைத்த
நந்தர்கள் கதையைச் சொல்கிறது
அகநானூறு(265)
பொன்மலி பாடலி என்று
கொண்டாடுகிறது குறுந்தொகை(75)

கடலூர் மாவட்டத்தில் உள்ள
திருப்பாதிரிப் புலியூரின்
பழைய பெயரும் பாடலிபுத்திரம்!
பாதிரி மரத்தின் பெயர் பாடலி
ஆகியிருக்கிறது.

கங்கைக்கரை பாடலிக்கும்
கடலூர் பாதிரிக்கும் 2000 கி.மீ.
இடைவெளி!
ஆனால் கலைவளமும் தொன்மையும்
புராணமும்
நிரம்பி இருக்கும் இடங்கள்!

நெருக்கடி காலத்தில்
ஜனநாயகத்தைக் காப்பாற்றப்
போராடிய கலைஞர்தான்
இப்போதும் ஜனநாயகத்துக்குத்
தோன்றாத் துணை நாதர்!
தொல்காப்பியப் பூங்கா தந்தவருக்குத்
திருவாரூருக்கு அருகே கலைஞர்
கோட்டம்!
இருநூறு ஆண்டுகளுக்கு முன்
காணாமல் போக இருந்த
தமிழர்களின் வாழ்க்கையைச்
சொல்லும்
தொல்காப்பியப் பொருளதிகாரத்தைக்
காப்பாற்றிக் கொடுத்தது திருவாரூர்!
ஆரூரில் இருந்த வடுகநாத தேசிகர்
மட்டுமே
அப்போது தொல்காப்பியம்
அறிந்தவராக இருந்தாராம்.
அவரிடம் சென்று இரண்டு ஆண்டுகள்
ஆரூரில் தங்கிப் பயின்றவர்
வேங்கடாசல முதலியார்!
அவர் தனது மகன்
வரதப்ப முதலியாருக்குக் கற்றுக்
கொடுத்தாராம்
அவர் வழிதான் தமிழகத்தில்
தொல்காப்பியப் பொருளதிகாரம்

பரவத் தொடங்கியதாம்.
அதனால் அவர்
தொல்காப்பிய வரதப்ப முதலியார்
என்றே
அழைக்கப்பட்டார் என்று
தொல்காப்பியத்தை அச்சில்
கொண்டுவந்த
சி.வை. தாமோதரம் பிள்ளை
திருவாரூருக்கும்
தொல்காப்பியத்துக்குமான
தொடர்பை 1885-ஆம் ஆண்டே
குறிப்பிட்டிருக்கிறார்.

அங்கேதான்
ஆழித்தேரில் கலைஞரை
அமரவைத்துக்
கலைஞர் கோட்டத்தைக்
கட்டி எழுப்பியிருக்கிறார் முதல்வர்!
அவர்தான் தமிழுக்கும்
இப்போது தோன்றாத் துணை நாதர்!
ஆட்சியில் இருந்தவன் சமயக் காழ்ப்பில்
கல்லில் கட்டிக் கடலில் தூக்கி எறிந்த
திருநாவுக்கரசர் கரையேறியது
கதையாக இருந்தாலும்
"கரையேறவிட்ட குப்பம்"
இப்போதும் இருக்கிறது
திருப்பாதிரிப் புலியூரில் !

அப்பரும் சம்பந்தரும் பாடிய
திருப்பாதிரிப் புலியூர் இறைவன்
தோன்றாத் துணை நாதர்!
தோன்றாத் துணை நாதர்!
மத வெறுப்புக் கடலில்
மூழ்கடிக்கப்படும் ஜனநாயகத்தை
வருகிற தேர்தலில் கரையேற்றத்
தோன்ற வேண்டும் மக்கள்
தோன்றாத் துணை நாதராக!

அன்புடன்
ம.ரா.

நன்றி :
கணையாழி

ஆளுநர்கள் அரசியல் சாசனத்தை படிக்க வேண்டும்!

முதலமைச்சரை கலந்தாலோசிக்காமல் ஆளுநர் ஆர்.என்.ரவி செயல்படுவதா?

'டெக்கான் கிரானிக்கிள்' நாளேடு தலையங்கம்

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் விதிமுறைகளை மாநில ஆளுநர்கள் படித்து, அதன்படி வழிநடக்க வேண்டும் என்று 'டெக்கான் கிரானிக்கிள்' நாளேடு தனது தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

சுமார் 73 ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கிய அரசியலமைப்பால் நிர்வகிக்கப்படும் ஒரு ஜனநாயகக் குடியரசாக இந்தியா உள்ளது என்ற உண்மையை அறியாத ஒரு சிலர் இந்த நாட்டில் இன்னும் இருக்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக அவர்களில் பெரும்பாலோர் ராஜ்பவன்களை ஆக்கிரமித்துள்ளனர். சுதந்திர இந்தியாவில் ஆளுநர்கள் ஆங்கிலேய அரசு அல்லது அவர்களது தளபதிகளுக்கு இணையான அதிகாரத்தையும், விதிவிலக்கையும் அனுபவிப்பதாக நினைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்கள் மற்றும் அமைச்சரவைகள் ஆகியவை தங்கள் பொறுப்பில் இருப்பதாக நினைத்து முரட்டுத்தனமாக செயல்படுகிறார்கள்.

அவர்கள் மாநில சட்டமன்றங்கள் நிறைவேற்றிய சட்டங்களின் மீது அமர்ந்து கொண்டு சிலவற்றைத் தேர்ந்தெடுத்து கையெழுத்திடுகிறார்கள். அதே நேரத்தில் அந்த சட்டமன்றங்கள் செயல்படுவதில் இருட்டடிப்பு செய்கிறார்கள். சுருக்கமாகச் சொல்வதென்றால் அந்த நிலைப்பாடுகள் ஜனநாயக ஆட்சி மற்றும் அரசியலமைப்பு உரிமை என்ற கருத்தாங்களை குறைவான மதிப்பிற்கே உட்படுத்துகின்றன.

சுதந்திர இந்தியாவின் மிக மோசமான அப்படிப்பட்ட அத்துமீறல்களில் ஒன்றாக தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என். ரவி, மாநில முதல்வருடன் கலந்தாலோசிக்காமல் ஒரு அமைச்சரை வியாழக்கிழமை அன்று டிஸ்மிஸ் செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார். அது சில மணி நேரங்களிலேயே திரும்பபெறப்பட்டும் உள்ளது. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா சரியான நேரத்தில் தலையிட்டு கவர்னருக்கு அட்வகேட் ஜெனரலின் ஆலோசனையைப் பெற அறிவுறுத்தி



DECCAN Chronicle
1 JULY 2023

Why governors need to study the Constitution

There are still a few people in this country who are unaware of the fact that India is a democratic republic governed by a Constitution its people gave to themselves some 73 years ago, and sadly, most of them occupy Raj Bhavans. They run roughshod over elected legislatures and councils of ministers accountable to them, thinking that the governors in Independent India enjoy the same level of power and immunity as the governor generals of the Raj. They sit over pieces of legislation passed by state Assemblies and pick and choose some to sign while keeping the legislatures in the dark over the others. They, in short, undermine the very idea of democratic governance and constitutional propriety.

One of the worst displays of gubernatorial excesses in Independent India was orchestrated by Tamil Nadu governor R.N. Ravi who on Thursday issued an order dismissing a minister without consulting the chief minister, only to retract in hours. The timely intervention and advice of Union home minister Amit Shah to the governor to seek the advice of the Attorney General of India has saved the Union government the blushes though it cannot distance itself completely from the wrongdoings of the governor. The governor, in his letter to the chief minister dismissing the minister, said that he was "conscious of the fact that, under ordinary circum-

யதன் மூலம் ஆளுநரின் தவறுகளில் இருந்து மத்திய அரசு முற்றிலுமாக காப்பாற்றாவிட்டாலும், ஓரளவாவது விலகச் செய்திருக்கிறது. அமைச்சரை பதவி நீக்கம் செய்வதாக முதல்வருக்கு ஆளுநர் எழுதியுள்ள கடிதத்தில் "வழக்கமான சூழ்நிலைகளில் தான் ஒரு ஆளுநர் அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில் செயல்படுகிறார் என்ற உண்மையை நான் அறிவேன்" என்று குறிப்பிட்டுள்ளார். "அரசமைப்புச் சட்ட விதிகளின்படி மாநில அரசை நடத்த முடியாது" என்று குடியரசுத் தலைவர் ஆட்சியை மீண்டும் அமல்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்ற அசாதாரணமான சூழ்நிலையில்தான் ஆளுநர் சுயமாக செயல்பட முடியும் என்ற அரசியலமைப்பு விதிகளை தவறாகப் புரிந்துகொண்டதாகத் தெரிகிறது.

அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில் எப்போது செயல்பட வேண்டும் என்பதை முடிவு செய்யும் அதிகாரத்தை அவர் தன்னிடமே வைத்துக் கொள்ளவும் முடியாது. அரசமைப்புச் சட்டம் ஆளுநருக்கு, முதலமைச்சர் அறிவுரை வழங்குவதைப் பற்றிப் பேசுகிறதே தவிர அதற்கு நேர்மாறாக எதுவும் கூறவில்லை என்பதால் அமைச்சரைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டாம் என்று முதலமைச்சருக்கு ஆளுநர் அறிவுரை அளிப்பது தவறானது. "ஆளுநர் என்பவர் மாநில அரசின் சுருக்கெழுத்தாக செயல்படுவர் என்றும், குடியரசுத் தலைவர் என்பவர் மத்திய அரசின் சுருக்கெழுத்தாக செயல்படுபவர் என்றும் என்று உச்ச நீதிமன்றம் மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளதை இங்கே நினைவில் கொள்ள வேண்டும்.

நீதிமன்றக் காவலில் இருக்கும் அமைச்சரைத் தொடர்ந்து சட்டமன்றத்தில் நீடிப்பது "சட்டத்தின் சரியான செயல்முறைக்கு இடையூறாகவும், நீதியின் போக்கை சீர்குலைக்கும்" என்ற அச்சம் இருப்பதாக ஆளுநர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். சென்னை உயர் நீதிமன்றம் உட்பட பல்வேறு நீதிமன்றங்கள் இந்த வழக்கின் பல்வேறு அம்சங்களை ஆராய்ந்து வருகின்றன. மேலும் நீதியின் போக்கு பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும் உள்ளன. மேலும், இந்த வழக்கை விசாரிக்கும் கூட்டாட்சி அமைப்பான அமலாக்க இயக்குநரகம் நீதிமன்றத்தை நாடுவதை எதுவும் தடுக்கவில்லை.

1951ம் ஆண்டு அரசியலமைப்பு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் ஆகியவை ஒரு குடிமகன் எம்.எல்.ஏ அல்லது எம்.பி ஆவதற்கான தகுதிகளை வரையறை செய்துள்ளன. அதிகாரப் பதவிகளை வகிக்கும் கிரிமினல் குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கும் நபர்களின் விருப்பத்திறன் பற்றிய விவாதம் வரவேற்கத்தக்கது. ஆனால் எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் சட்டத்தின் சரியான செயல் முறையைப் பின்பற்ற வேண்டும்.

இந்த வகையில் ஒவ்வொரு முறையும் அட்டர்னி ஜெனரலுக்கு இப்படிப்பட்ட சுமையை அளிப்பதற்கு பதிலாக, நியமனத்தை அறிவிப்பதற்கு முன்பாக ஆளுநர்கள், வேட்பாளர்களை அரசியல் சாசன விதிகளின் அடிப்படையில் ஆராயும் வழிமுறைகளை மத்திய அரசு ஏற்படுத்துவது நல்லது. அதன் பிறகு, அரசியலமைப்பைப் பாதுகாப்பது மத்திய அரசின் பணிகளில் ஒன்றாகவும் இருக்கப் போகிறது.

இவ்வாறு டெக்கான் கிரானிக்கிள் நாளேடு தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

திருப்பூர் காதர்பேட்டை பனியன் பஜாரில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட

51 கடைகளின் உரிமையாளர்களுக்கு ரூ.25 இலட்சத்து 50 ஆயிரம்!

க.செல்வராஜ் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருப்பூர், ஜூலை 2-

திருப்பூர் காதர்பேட்டை பனியன் பஜாரில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 51 கடைகளின் உரிமையாளர்களுக்கு ஆறுதலாக தனது சொந்த நிதியிலிருந்து ஒரு கடைக்கு 50 ஆயிரம் வீதம் 51 கடைகளுக்கு 25 இலட்சத்து 50 ஆயிரம் ரொக்க பணத்தை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., வழங்கினார்.

மக்கள் நலன் காக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு என்றும் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதை நிரூபிக்கும் வகையில் திருப்பூர் காதர்பேட்டை பனியன் பஜாரில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 51 கடைகளின் உரிமையாளர்களுக்கு ஆறுதலாக தனது சொந்த நிதியிலிருந்து ஒரு கடைக்கு 50 ஆயிரம் வீதம் 51 கடைகளுக்கு 25 இலட்சத்து 50 ஆயிரம் ரொக்க பணத்தை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., வழங்கினார். இதில் திருப்பூர் தெற்கு மாநகரக் கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி துணை ரா.பாலசுப்பிரமணியன், மாவட்ட துணை செயலாளர் டிஜிட்டல் எஸ்.சேகர், பொதுக்குழு உறுப்பினர் சலீம் (எ) அப்துல் ரகுமான், செ.திலகராஜ், பகுதி கழக செயலாளர்கள் மியாமி ஆ.அய்யப்பன், மு.க.உசேன், மாமன்ற உறுப்பினர், கல்விக் குழு தலைவர் பெ.திவாகரன் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

வ.எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	மொத்தம்
1	த.பொ./வ.செ.அ.மி.நி-II	OM 75	1

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும், திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்." செ.ம.தொ.இ/3364/ஒப்பந்தப்புள்ளி/2023

தமிழ்நாடு அரசு
காளப்பநாயக்கன்பட்டி (முதல்நிலை) பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்

ந.க.எண்:58/2023 ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை நாள்:28.06.2023

நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT) : 2023-2024

வ. எண்	வேலையின் பெயர்	மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்	செலுத்த வேண்டிய தொகை: முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம்	ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை வரியுடன்	ஒப்பந்த தாரரின் தகுதி	வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்)
1	காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சி நஞ்சுண்டாபுரம் பள்ளர் தெரு, நஞ்சுண்டாபுரம் நடுத்தெரு மற்றும் நஞ்சுண்டாபுரம் கிழக்கு தெரு பகுதிகளில் தார் சாலை மேம்பாடு செய்தல்.	63.00	63,000	17,700	Class -1	6 மாதங்கள்

காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சி 2023–24-ம் ஆண்டு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் (NSMT) மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two Cover System) கொண்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சியின் செயல் அலுவலர் (அ) அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் 14.07.2023 செவ்வாய் கிழமை பிற்பகல் 03.00 மணி வரை இணையதளம் வாயிலாக பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 17.07.2023 பிற்பகல் 03.30 மணிக்கு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும்.

1. ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட நிபந்தனைகளை காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 14.07.2023 ஆம் தேதி பிற்பகல் 03.00 மணிக்குள் https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தலைவர்
காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்.

செ.ம.தொ.இ./3359/ஒப்பந்தப்புள்ளி/2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

செயல் அலுவலர்,
காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்.

தமிழ்நாடு அரசு
காளப்பநாயக்கன்பட்டி (முதல்நிலை) பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்

ந.க.எண்:57/2023 ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை நாள்:28.06.2023

நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT) : 2023-2024

வ. எண்	வேலையின் பெயர்	மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்	செலுத்த வேண்டிய தொகை: முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம்	ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை வரியுடன்	ஒப்பந்த தாரரின் தகுதி	வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்)
1	காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சி உடையார் தெரு, புதூர் நடுத்தெரு, புதூர் தேற்கு தெரு, கொல்லிமலை மெயின் ரோடு நடுத்தெரு, கோட்டைநாயக்கன் தெரு நஞ்சுண்டாபுரம் தெற்கு தெரு குறுக்குத் தெருக்களில் சிமெண்ட் சாலை மேம்பாடு செய்தல்.	112.00	1,12,000	17,700	Class -1	6 மாதங்கள்

காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சி 2023–24-ம் ஆண்டு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் (NSMT) மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two Cover System) கொண்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சியின் செயல் அலுவலர் (அ) அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் 14.07.2023 புதன் கிழமை பிற்பகல் 03.00 மணி வரை இணையதளம் வாயிலாக பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 17.07.2023 பிற்பகல் 03.30 மணிக்கு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும்.

1. ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட நிபந்தனைகளை காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 14.07.2023 ஆம் தேதி பிற்பகல் 03.00 மணிக்குள் https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தலைவர்
காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்.

செ.ம.தொ.இ./3360/ஒப்பந்தப்புள்ளி/2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

செயல் அலுவலர்,
காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்.

நிகழ்ச்சி ஏற்பாடு: த.தேவராஜ்! ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி

113 (அ) வட்டத்தில் அறுசுவை உணவு!

நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - நா.எழிலன் - அன்பகம் கலை- மா.பா. அன்புதுரை பங்கேற்பு!

சென்னை, ஜூலை 2-

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி 113 (அ) வட்ட கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு துவக்க விழாவை முன்னிட்டு இன்று (2.7.2023, ஞாயிற்றுக்கிழமை) மதியம் 12 மணியளவில் அறுசுவை பிரியாணி வழங்கும் விழா நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், தலைமை அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பகுதி செயலாளர் மா.பா. அன்புதுரை மற்றும் கழக மாமன்ற உறுப்பினர் கள், கழக நிர்வாகிகள் கலந்துகொள்கிறார்கள்.

113 (அ) வட்ட கழக செயலாளர் த.தேவராஜ் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்துள்ளார்.

க.தேவராஜி எம்.எல்.ஏ. முன்னிலையில்

திருப்பத்தூர் மாவட்டம் - சின்னாரம்பட்டியில் பண்ணை குட்டைகள் அமைக்கும் பணி!

அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்!

திருப்பத்தூர், ஜூலை 2-

தமிழ்நாடு முதல்வரும், கழக தலைவர் அவர்களின் நல்லாட்சியில் திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், சின்னாரம்பட்டி ஊராட்சியில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டி.பாஸ்கர் பாண்டியன் தலைமையில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும்,ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி முன்னிலையில் நடைபெற்ற மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் 1400 பண்ணை குட்டைகள் அமைக்கும் பணிகள் துவக்க விழாவில் பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பண்ணை குட்டைகள் அமைக்கும் பணியை தொடங்கி வைத்து சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குனர் கு.செல்வராசு, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், திருப்பத்தூர் மாவட்ட ஆவின் தலைவர் எஸ். ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் கு. ராஜமாணிக்கம், கந்திலி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.முருகேசன், கந்திலி ஒன்றியக் குழுத் தலைவர் திரும திதிருமுருகன் மற்றும் அரசு துறை அதிகாரிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

புழல் மத்திய சிறை 1 இல் தேசிய மருத்துவர்கள் தினத்தினை முன்னிட்டு ரோட்டரி சென்னை மாவட்டம் 3232 மூலமாக மெகா மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்ற சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குனர் அமரேஷ் புஜாரி மருத்துவ முகாமினை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். ரோட்டரி மாவட்ட கவர்னர் ரவி ராமன் சிறப்பு உரையாற்றினார். முகாமில் 18 மருத்துவர்கள் கலந்து கொண்டு சுமார் 350 சிறைவாசிகளுக்கு உயர் சிகிச்சை அளித்தனர். பெண்கள் சிறைக்கு டெலிவரி கிட் ஒரு செட் வழங்கினார்கள். மேலும் இந்நிகழ்ச்சியில் இரா. கனகராஜ். சிறைத்துறை டிஐ ஜி (தலைமையிடம்). ஆ. முருகேசன். சிறைத்துறை டி ஐ ஜி (சென்னை சரகம்). மத்திய சிறை கண்காணிப்பாளர்கள் திருமதி. நிகிலா நாகேந்திரன். கிருஷ்ணராஜ் மற்றும் ரோட்டரியன்ஸ் பலர் கலந்து கொண்டனர்.